தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்
**அசாதாரணம்** அதிகாரபூர்வ வெளியீடு

எண். 256 சென்னை, திங்கள், ஜூலை 31, 2017

ஆடி 15, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2048

## பாகம் II – பிரிவு 2

## ஒரு பிரிவு பொதுமக்களின் நலன் கருதி தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அல்லது ஆணைகள்

### அரசின் அறிவிக்கைகள்

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிகள் சட்டம், 2017 –ன் கீழ் அறிவிப்புகள்

அறிவிக்கையில் பிழைத்திருத்தம்

*[அரசாணை (நிலை) எண். 87 வணிகவரிகள் மற்றும் பதிவு [ (ஆ1) துறை 31 ஜூலை 2017 ]*

*ஆடி 15, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/ *வவப* /595(ஈ–1)2017**

வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கை எண். II(2)/ ***வவப*** 532(டி–4)2017 நாள் 29–06–2017 வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு அசாதாரண அரசிதழ் பக்கம் 3 முதல் 68 வரை, பாகம் II – பிரிவு 2–ல் பின்தொடரும் திருத்தங்கள் வெளியிடப்படுகிறது.

**பிழைத்திருத்தம்**

சொல்லப்பட்ட அறிவிக்கையில், பக்கம் 55, வரிசை எண் 11, நிரல் (2) – இல் "2202 90 90" என்பதற்காக "2202 99 90" என்று படிக்கவும்.

முனைவர்.ச.சந்திரமௌலி,
(கூடுதல் தலைமை செயலாளர்)(முகூபொ).

## அறிவிக்கையில் திருத்தங்கள்

*[அரசாணை (நிலை) எண். 88, வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1) 31 ஜூலை 2017*

*ஆடி 15, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/595(உ–வ)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 9ன் உட்பிரிவு(1) – இல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி தமிழ்நாடு ஆளுநரால், வணிகவரிகள் மற்றும் பதிவு துறை அறிவிப்பு எண் II(2)/வவப 532(டி–4)2017, 2017 ஜீன் 29 நாளன்று வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசு அரசிதழ் அசாதாரணம் பக்கம் 3 முதல் 68, பாகம் II – பிரிவு 2–ல் பின்தொடரும் திருத்தங்கள் வெளியிடப்படுகிறது.

## திருத்தங்கள்

சொல்லப்பட்ட அறிவிக்கையில்:–

(i) அட்டவணை I-2.5% வரிசை எண் 182க்குப் பிறகு அதன் தொடர்புடைய பதிவுகளில் பின்தொடரும் வரிசை எண்கள் மற்றும் பதிவுகள் இடைச்சேர்க்கப்படுகிறது. அதாவது–

| *வ. எண்.* | *அத்தியாயம் / தலைப்பு / துணை– தலைப்பு / கட்டண வீதப்பட்டியல் பொருள்* | *சுரக்குகளின் விவரங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| “182A | 3102 | கனிம அல்லது இரசாயன உரங்கள் நைட்ரஜன் (Nitrogenous) அடங்கியது தெளிவாக எவையெல்லாம் உரங்களாக பயன்படுத்த முடியாதோ அவை தவிர. |
| 182B | 3103 | கனிம அல்லது இரசாயன உரங்கள் எரியக்கூடிய இயல்பு வாய்ந்தது பாஸ்பேட் (Phosphotic), தெளிவாக எவையெல்லாம் உரங்களாக பயன்படுத்த முடியாதோ அவை தவிர. |
| 182C | 3104 | கனிம அல்லது இரசாயன உரங்கள் பொட்டாசிக் (Potassic) தன்மை கொண்டது, தெளிவாக எவையெல்லாம் உரங்களாக பயன்படுத்த முடியாதோ அவை தவிர. |
| 182D | 3105 | கனிம அல்லது இரசாயன உரங்கள் இரண்டு அல்லது மூன்று உரக் கூறுகள் நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் கொண்டது; இதர உரங்கள் இந்த அத்தியாயத்தில் உள்ள சரக்குகள் மாத்திரையாகவோ அல்லது அதன் வடிவத்திலோ அல்லது மொத்த எடை 10 கிகி மிகாமல் உள்ள தொகுப்புகள், தெளிவாக எவையெல்லாம் உரங்களாக பயன்படுத்த முடியாதோ அவை தவிர. |

(ii) அட்டவனை II–6% வரிசை எண் 66, 67, 68 மற்றும் 69 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் நீக்கப்படுகிறது.

1. இந்த அறிவிக்கையானது ஜூலை 1, 2017 முதல் நடைமுறைக்கு வந்ததாக கருதப்படும்.

முனைவர்.ச.சந்திரமௌலி,
(கூடுதல் தலைமை செயலாளர்)(முகூபொ).